விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 15 திங்கட்கிழமை (01.11.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 317

## வாசு, விமல், கம்மன்பில ஆகியோரது அமைச்சுப் பதவிகள் பறிபோகலாம்



### அமைச்சர் காமினி லொக்குகே எச்சரிக்கை

(கொழும்பு)
ஸ்ரீ லங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சியின் தலைவர்கள் அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் தொடர்ந்து செயற்பட்டால் அமைச்சுப் பதவி விரைவில் பறிபோகும்.

வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் ஜனாதிபதி, பிரதமர் முன் 15

## தமிழ்க் கட்சிகளின் கூட்டம் யாழில் நாளை இடம்பெறும்

### ஹக்கீம், மனோ பங்கேற்பர்

(யாழ்ப்பாணம்)
13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுலாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் மீளப்பறிக்கப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டியும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதவுள்ள கடிதத்தினை தமிழ் பேசும் சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத் 15

இடியுடன் கூடிய

## பலத்த மழை வடக்கில் தொடரும்

(யாழ்ப்பாணம்)
இலங்கையை அண்மித்த பகுதியில் நிலவிய குறைந்த காற்றமுத்த தாழ்வு நிலை தொடர்ந்தும் இலங்கையைச் சுற்றி 15

## இலங்கையில் தொடரும் இன அடக்குமுறைகள்

### ஐ.நா விசேட அறிக்கையாளர் மேரி லோலொர்



(கொழும்பு)
மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் அவர்களது கடமைகளிலும் மனித உரிமைகள்சார் செயற்பாடுகளிலும் தொழிற்சங்க நடவடிக்கையிலும் ஈடுபட்டமைக்காக இன அடக்குமுறைகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் தன்னிச்சையான தடுத்து வைப்புகளுக்கும் உள்ளாக்கப்படுவது குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் மேரி லோலொர் கடும் விசனத்தை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் மீது அடக்குமுறைகளும் அச்சுறுத்தல்களும் பிரயோகிக்கப்படுவது குறித்தும் அவர்கள் 15

கொரோனாவால்

## 18 பேர் பலி

(கொழும்பு)
கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்ட 18 பேர் ஒரே நாளில் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இலங்கையில் 15

## கொடிகாமத்தில் விபத்து; முதியவர் உயிரிழப்பு

(கரணவாய்)
ஏ9 பிரதான வீதி இராமாவில் கோவிலடி, கொடிகாமத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் உயிரிழந்துள்ளார்.

முன்னே சென்ற துவிச்சக்கர வண்டிமீது மோட்டார் சைக்கிள் மோதி இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் கச்சாய் வீதி கொடிகாமத்தைச் சேர்ந்த செல்லையா 15

சீரற்ற காலநிலையால்

## 69 குடும்பங்களைச் சேர்ந்த 247 பேர் யாழில் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக மழையுடன் கூடிய காலநிலை நிலவி வருகின்றது.

இதனால், யாழ்.மாவட்டத்தில் 69 குடும்பங்களைச் சேர்ந்த 247 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி ஊர்காவற் 15

வவுனியாவில்

## தரம் ஐந்து மாணவனுக்கு கொரோனா

(வவுனியா)
வவுனியா மகாகச்சக்கொடிய பகுதியில் அமைந்துள்ள பிரபல பாடசாலையில் தரம் 5இல் கல்வி பயிலும் மாணவன் ஒருவனுக்கு கொரோனா 15

மாகாணங்களுக்கிடையிலான

## போக்குவரத்து சேவைகள் இன்று முதல் ஆரம்பம்

### இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம



(கொழும்பு) மாகாணங்களுக்கிடையிலான பொதுப் போக்குவரத்துச் சேவை இன்று முதல் வழமையான நேர அட்டவணைக்கு அமைய ஆரம்பமாகும். தூரப் பிரதேச புகையிரத சேவை எதிர்வரும் 5ஆம் திகதி முதல் மீள ஆரம்பிக்கப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். (15ஆம் பக்கம் பார்க்க)

சுகாதார நடைமுறைகளை மீறினால்

## மீண்டும் ஆபத்து ஏற்படும்

### உபுல் ரோஹண எச்சரிக்கை

(கொழும்பு)
மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை நேற்று முதல் நீக்கப்பட்டுள்ள நிலையில், பொதுமக்கள் முறையான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாவிட்டால் நாடு மீண்டும் ஒரு துரதிர்ஷ்டமான நிலைக்குச் செல்லும் என இலங்கை பொதுச் சுகாதார பரி 15

கோட்டாவுக்கு எதிராக

## ஸ்கொட்லாந்தில் இன்று போராட்டம்

(கொழும்பு)
கோட்டாபயவின் வருகைக்கு எதிராக, மாபெரும் கண்டன எதிர்ப்புப் போராட்டம் இன்று ஸ்கொட் 15

வடக்கில்

## 44 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
வவுனியாவில் கொரோனாப் பரவல் 15

# சட்டத்தை உருவாக்குவதற்கு ஆலோசனை வழங்கவே ஞானசாரர் நியமனம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டுக்கு தேவையான சட்டத்தை உருவாக்க கலகொட அத்தே ஞானசார தேரர், ஒரு நாடு - ஒரு சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணிக்குழுவின் தலைவராக நியமிக்கப்படவில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அது சம்பந்தமாக தனக்கு ஆலோசனை வழங்கவே ஞானசார தேரர், அந்தச் செயலணிக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஆளும் கட்சியின் தலைவர்களுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை ஒன்றில், இந்தச் செயலணிக்குழு தொடர்பாக வினவப்பட்ட போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தனக்கு ஆலோசனை வழங்க நியமிக்கும் செயலணிக் குழுவிற்கான தலைவர் பதவியில் தான் விரும்பிய நபரை நியமிக்க முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

தான் செய்யும் அனைத்து வேலைகளுக்கும் கட்சித் தலைவர்களிடம் ஆலோசனை பெற்றுக்கொண்டிருந்தால், நண்பர் ஒருவருடன் பழகக்கூட கட்சித் தலைவர்களிடம் அனுமதி பெற நேரிடும் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

நீதியமைச்சராக அலி சப்ரியை நியமித்தபோது இதே போன்ற எதிர்ப்பு முன்வைக்கப்பட்டது. எனினும் அலி சப்ரி தற்போது அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் சேவையை நிறைவேற்றி வருகிறார் எனவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மேலும் தெரிவித்துள்ளார். (ஞா)

# தொடரும் மதவெறித் தாக்குதல்

# மன்னாரில் பிரதிஸ்டை செய்யப்பட்ட பிள்ளையார் சிலை மீண்டும் மாயம்

(மன்னார்)

10 மாதங்களிற்கு முதல் காணாமல் ஆக்கப்பட்டு கடந்த மாதம் 7 ஆம் திகதி உருத்திர சேனையால் மீள் பிரதிஸ்டை செய்யப்பட்ட மன்னார் முசலி பிரதேச பாசித்தென்றல் குளத்தடியில் அமர்ந்திருந்த 100 வருட வரலாற்றை உடைய பிள்ளையார் நேற்று முன்தினம் இரவு முதல் மீண்டும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே இங்கு இருந்த பிள்ளையார் சிலை விசமிகளினால் உடைத்து எறியப்பட்டு இருந்த நிலையில் மீண்டும் கடந்த மாதம் 7 ஆம் திகதி பிள்ளையார் திருவுருவம் மீள்பிரதிஸ்டை செய்யப்பட்டது.



சில நாட்களிற்கு முதலும் மன்னார் மடுவில் பிள்ளையாரை உடைத்து பிள்ளையார் கோவிலில் அந்தோனியாரை விசமிகள் நிறுவியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

# நாட்டு மக்களை இருட்டில் வைத்திருக்க முயல்வது அநீதியானது

## அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ

(கொழும்பு)

நாட்டு மக்களை இரு தினங்கள் இருட்டில் வைத்திருக்க முயல்வது எத்தகைய அநீதியான முடிவாகும் என ஆளும் தரப்பு பிரதம கொறடா நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நவம்பர் மாதம் பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்படவுள்ள பேலியகொட புதிய களனி பாலத்தின் இறுதிக்கட்ட நிர்மாணப் பணிகளை ஆளும் தரப்பு பிரதம கொறடா ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டார். புதிய களனிப் பாலம் கொழும்பு நகரின் அழகை மேம்படுத்தும் என்பதால் கோபுரங்களில் நிர்மாணிக்கப்பட்ட பாலத்திற்கருகில் நிலத்தை அழகுபடுத்துவதற்காக நடப்பட்டுள்ள உள்ளூர் தாவரங்கள் குறித்து அமைச்சர் கவனம் செலுத்தினார்.

கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கப்போவதாக தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளது தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்,

தொழிற்சங்கங்கள் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் சரியானது என்று சொல்ல முடியாது. தொழிற்சங்கம் என்பது அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாகும். அண்மையில் துறைமுக தொழிற்சங்கங்கள் கிழக்கு முனையத்தை வழங்குவதை எதிர்த்தன.

இதன் விளைவாக கிழக்கு முனையத்திற்கு பதிலாக அதனை விட பெரிய மேற்கு முனையம் வழங்கப்பட்டது. தொழிற்சங்கங்கள் அரசியல் கோணத்தில் இல்லாமல் நாடு முகங்கொடுத்துள்ள நெருக்கடி நிலை குறித்து சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

ஒரு அலகு மின்சாரத்தின் விலை குறைவதாக இருந்தால் தொழிற்சங்கங்கள் ஏன் அதனை எதிர்க்கின்றன? குறைந்த விலையில் மின்சாரம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்தால் அது ஊழல் ஆகாது. தொழிற்சங்கங்கள் அதிக விலைக்கு சார்பாக இருந்தால் அதன் பின்னணியில் அரசியல் நோக்கம் இருக்கிறது. தொழிற்சங்கங்கள் இந்த நாட்டு மக்களை இரண்டு நாட்களுக்கு இருட்டில் வைத்திருக்க முயல்கின்றன என்றால் அது எத்தகைய அநீதியான முடிவாகும்? இதை அறிவுள்ள நாட்டு மக்கள் கவனமாக பார்க்க வேண்டும் என்றார். (ஞா)

# அவசியமற்ற பயணங்களை மேற்கொள்ளவேண்டாம்

## சுகாதாரப் பணிப்பாளர் வேண்டுகோள்

(கொழும்பு)

வினோத பயணங்கள் அல்லது வேறு அவசியமற்ற பயணங்களை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்க மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடுகளைத் தளர்த்தவில்லை எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மக்களுக்காக, அத்தியாவசிய சேவைகளைத் தடையின்றி முன்னெடுப்பதற்காகவே மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார். (ஞா)


## கட்டடம் வாடகைக்கு வழங்குதல்

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்திற்கு சொந்தமான நுகவில், விக்கினேஸ்வரா வீதி, கரவெட்டி என்னும் முகவரியில் உள்ள 27' X 16' விஸ்தீரணமுள்ள கடைக் கட்டடம் ஒன்று வாடகைக்கு வழங்கப்பட உள்ளது. பெற விரும்புவோர் தங்களது கூறுவிலைகளை **தலைவர், கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கம், கரவெட்டி** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மேலதிக விபரங்களுக்கு பொது முகாமையாளருடன் காரியாலய நேரங்களில் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
கட்டைவேலி - நெல்லியடி
ப.நோ.கூ.சங்கம்,
கரவெட்டி.

**021 226 3263**

(C-2922)


# விரைவில் புதிய ஆட்சியை அமைத்தே தீருவோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் நம்பிக்கை

(கொழும்பு)

“மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்துவிட்டோம் என்று மார்தட்டிய அரசு, இன்று துண்டு துண்டாக உடையும் நிலையில் உள்ளது. மக்களுக்குத் துரோகமிழைத்த இந்த அரசு, ஆட்சி கவிழும் நாட்களை எண்ணிக்கொண்டிருக்கின்றது. நாம் விரைவில் புதிய ஆட்சியை அமைத்தே தீருவோம்” இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவித்ததாவது, அரசு ஏற்கனவே மக்களின் ஆணையைக் காட்டிக் கொடுத்து விட்டது.

அரசு செல்லும் இந்த அழிவான பயணத்தை ஐக்கிய மக்கள் சக்தியால் மாத்திரமே பின்நோக்கித் திருப்ப முடியும்.

அரசால் அநீதி இழைக்கப்பட்ட விவசாயிகள், இன்று எம்மிடம் நீதி கேட்கின்றனர். விரைவில் அமையவுள்ள எமது புதிய ஆட்சியில் விவசாயிகளுக்கு நீதியை வழங்கியே தீருவோம். சேர் ஜோன் கொத்தலாவல அன்று நாட்டின் விவசாயிகளின் முன்னேற்றத்துக்காகப் பெரும் பங்களிப்பைச் செய்தார்.

ஹரியால உள்ளிட்ட பிரதேசங்களில் விவசாயக் குடியேற்றங்களை ஏற்படுத்த அவர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார் என்றார். (ஞா)


## கண்ணீர் பூக்கள்



வடமராட்சி மற்றும் யாழ்ப்பாணம் கல்வி வலயங்களின் முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளரும் யாழ். மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னாள் பிரதிச் செயலாளருமான

திரு.

**வே. தி. செல்வரட்ணம்**

அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மலர்வு : 05.01.1948
உதிர்வு : 29.10.2021

(8435)

உங்கள் வழிகாட்டலின் விழுதுகள்
யாழ். கல்வி வலயம்


# காணாமல்போனோர் விவகாரம்

# உறவினர்களுடன் சந்திப்பதற்கு ஏற்பாடுகளை முன்னெடுக்குக

## டக்ளஸுக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

காணாமல்போனோரின் உறவினர்களுடனான சந்திப்பிற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கும் கடற்றொழில் அமைச்சருக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விசேட சந்திப்பின்போது மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல்போனோரின் விவகாரத்திற்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வலியுறுத்தப்பட்டு வந்த நிலையில், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் காணாமல்போனோரின் உறவினர்களைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## எமது அருமைத்தெய்வம் சண்முகநாதனின் ஓராண்டு நினைவாகவும்

## எமது அருமை மகன் சந்துதனின் 12ஆவது ஆண்டு நினைவாகவும்

# துன்பம் நிறைந்த அன்பு மடல்



அமரர்

## மாணிக்கம் சண்முகநாதன்

மலர்வு:-08.03.1954
உதிர்வு:-26.09.2020



நீவீர் இருவரும் எமைப்பிரிந்து ஒன்றாய் இருக்க நாம் மட்டும் உங்கள் பிரிவைத் தாங்கி நாள்தோறும் கண்ணீர் வடித்துப் புலம்புகின்றோம். எங்கே போனீர்கள்? ஏன் போனீர்கள்? எமை மறந்து எனக் கேட்டு அழுகின்றோம். ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டானாலும் மறக்கத்தான் முடியுமோ? நீர் செம்மையாய் வாழ்ந்து செழுமையை ஏற்படுத்தி எமை வாழவைத்து எம் சுகமே உம் சுகம் என உமக்காக வாழாமல் எமக்காக வாழ்ந்து வாழ்க்கை என்றால் இதுதான் என்று வாழ்ந்து காட்டிவிட்டு எமைத் துடிக்கவிட்டுப் பறந்து போய் மகனார் கூட்டில் தஞ்சமடைந்தீர். அதுவே உமக்கு சொர்க்கம் என்று சொல்வீர். அதனால் உமக்கு கவலையில்லை. ஆனால் எமக்கோ ஆறாத கவலையும் கண்ணீரும். இது எம் வாழ்நாள் உள்ளவரை தொடர்ந்திருக்கும் அப்பா. அப்பாவின் அரவணைப்பில் வாடி நிற்கும் மகன்களை, வாழ்ந்த காலத்தில் வழிநடத்தியது போல வாழ்நாள் பூராகவும் வழிநடத்தி வாழவைப்பீர் என்ற அசையாத நம்பிக்கையோடு இம்மடலை முடிக்கின்றேன்.

அமரர்

## சண்முகநாதன் சந்துதன்

மலர்வு:-07.02.2000
உதிர்வு:-08.09.2009

உமை பிரிந்து வேதனையுடன் வாழும்
உம் அன்பு மனைவி, ச.அருள்நங்கை,
அருமைப்பிள்ளைகள்
ச.சந்துதன், ச.சாத்வீகன்

சண்முகநாதம்
கட்டப்பாலி வீதி,
ஆனைக்கோட்டை.

(C-2910)

## உதைபந்தாட்ட போட்டி
# இறுதிக்குள் கொற்றாவத்தை றேஞ்சஸ்



கரவெட்டி பிரதேச செயலக இளைஞர் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சஸ் இளைஞர் அணி இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது. இதன் அரையிறுதியாட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இமையாணன் மத்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. அரையிறுதியாட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் இளைஞர் அணியை எதிர்த்து இமையாணன் மத்தி இளைஞர் அணி மோதியது. இடைவேளைக்கு முன்னரான ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் இளைஞர் அணி வீரர் மாதவன் கோலைப் போட இமையாணன்மத்தி இளைஞர் அணி வீரர் டிவின்சன் ஒரு கோலைப் போட்டு ஆட்டத்தை சமநிலைப்படுத்தினார்.

இதனால் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் கொற்றாவத்தை றேஞ்சஸ் இளைஞர் அணி 4:3 என்ற கோல்க் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது. (4-90)

# இறுதி ஓவரில் தென்னாபிரிக்கா திரில் வெற்றி



உலகக் கிண்ண இருபதுக்கு 20 தொடரின் 25 ஆவது போட்டியில் தென்னாபிரிக்க அணி 04 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

சார்ஜாவில் நேற்று முன்தினம் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

அதன்படி முதலில் களமிறங்கிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.



அதில் அதிகபட்சமாக பத்தும் நிஸங்க 72 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுக்க பந்துவீச்சில் ஷம்சி 03 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இதனை அடுத்து 143 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 19.5 ஓவர்கள் நிறைவில் 06 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இப்போட்டியில் தென்னாபிரிக்கா அணி சார்பாக அணித்தலைவர் தம்பா பவுமா 42 ஓட்டங்களை பெற்றுக் கொடுக்க பந்துவீச்சில் ஹாட்ரிக் சாதனையுடன் வனிந்து ஹசரங்க மூன்று விக்கெட்டுகளையும் சமீர இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2440

### விதுனா

உலகிலேயே அதிக பொய்களை கொண்டுள்ள லெட்டர்
லவ் லெட்டர்




எங்களோட லீவ் லெட்டர நீ பார்த்தது இல்லையே...

### நிதுஷன்

நம்ம வாழ்க்கையில் மழை, வெயில், குளிர் காலம்னு எல்லா காலமும் வருது..



ஆனா.. நல்ல காலம் மட்டும் வரமாட்டிங்குது..

### திருமாளகன்

வயசு பொண்ணு ஒன்னு நம்மள தமிழ்ல மாமான்னு கூப்பிட்டா சந்தோஷமா இருக்கு..



அதுவே இங்கிலீஷ்ல அங்கிள் ன்னு கூப்பிட்டா கடுப்பா வருது..
இதைத்தான் பாரதி, யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் ன்னு சொல்லியிருப்பரோ..!!!

### கஸ்தூரி

அன்பே.. நம் காதல் இப்படியே காலம் பூரா தொடருமா..



தெரியலயே டார்லிங்... ஆனால் தீபாவளி வரைக்கும் இருக்கும்னு மட்டும் தெரியும்..

### ரசிகா




அடேய் இது தான் இதயம் இதுல தான் காதல் வருமாம்




இதுல எப்படி அண்ணே காதல் வரும் குத்துனா ரத்தம் தான் வரும்

### ஜெனார்த்தன்

இப்போதானேடா ஆயுத பூஜைக்கு வீட்டை ஒட்டட அடிச்சு தொடச்சு கொடுத்தேன்..



அதுக்குள்ள அடுத்த வாரம் தீபாவளினு மறுபடியும் மொதல்ல இருந்துவரிங்க

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


இனிய
தீபாவளி
வாழ்த்துக்கள்
"சுத்தமான நீர், சுகமான வாழ்வு"
SMART
NEXUS
NEXT
RO WATER PURIFIER
SMART
மாபெரும் விலைக் கழிவு
Rs.29,000/=
~~Rs.35,000/=~~
TDS <2000PPM
* இலவச நீர் பரிசோதனையுடனும்,
* மிகக் குறைந்த விலையிலும்,
* அதிகபட்ச உத்தரவாதத்துடனும்,
* எங்கும் பெறக்கூடிய உதிரிப்பாக வசதிகளோடும்,
* வாழ்நாள் முழுவதும் பராமரிப்பு சேவைகளுடனும்
* 24 மணித்தியாலத்தினுள் முறைப்பாட்டு திருத்திக்கொடுத்தல்
(C-2914)
Yarl Smart Water Solution
YARL SMART Water solution (Pvt) Ltd.
341, KKS Road, Jaffna / Karadippoku Junchtion, Jaffna Road, Kilinochchi.
021 430 0044, 076 666 5267
yarlsmartwater@gmail.com / www.yarlsmartwater.com

# ஆளுக்கொரு மரம் நட்டு நாளுக்கொரு வரம் பெறுவோம்

## தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கார்த்திகை மாதத்தில் எதிர்காலம் குறித்த நம்பிக்கையின் விதைப்பாக மரங்களை நாட்டுவோம் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் தீர்மானத்துக்கு அமைவாக ஆண்டு தோறும் கார்த்திகை மாதம் மரநடுகைமாதமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில், உலகம் என்றும் இல்லாதவாறு எதிர்காலம் குறித்த பெரும் நம்பிக்கையின்மையை எதிர்கொண்டுள்ளது.

கொரோனாப் பெருங்கொள்ளை நோயினாலும் காலநிலை மாற்றங்களாலும் நாடுகள் யாவும் நிலைகுலைந்து போயுள்ளன.

ஏழை-பணக்காரநாடுகள் என்ற பேதமின்றி எல்லா நாடுகளினதும் பொருளாதாரப் பலம் ஆட்டம் கண்டு வருகிறது.

இவற்றைச்சரிவரக்கையாள இயலாத நிலையில் நாடுகளின் அரசியல் வலுவும் கேள்விக்குறியாகியுள்ளது.

இயற்கையை நாம் அழித்தால் இயற்கையால் நாம் அழிவோம்" என்ற பாடத்தை பேரிடர்கள் எமக்கு வலுவாகப் போதித்திருக்கும் நிலையில், இப்போது சூழல் பாதுகாப்பினதும் மரநடுகையினதும் அவசியம் அதிகம் உணரப்பட்டுள்ளது.

இறந்தவர்களின் நினைவாக மரங்களை நடுகை செய்து அவற்றை உயிருள்ள நினைவுச் சின்னங்களாகப் போற்றிய பண்பாட்டு மரபைக் கொண்டிருந்தவர்கள தமிழர்கள்.

எதிர் காலம் குறித்த நம்பிக்கையின் விதைப்பாக ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வரம் பெறுவோம் என்று அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-5)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

இலங்கை மின்சாரசபையின் 52 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இலங்கை மின்சார சபை ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் சுண்டுக்குளி பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள வட மாகாணப் பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகத்தில் இரத்ததான முகாம் இடம் பெறவுள்ளது.

குறித்த இரத்ததான நிகழ்வில் ஆர்வமுள்ளவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(4-5-18)

# யாழ் - கொழும்பு புகையிரத சேவை மூன்றாம் திகதி முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் - கொழும்பு புகையிரத சேவை நாளை மறுதினம் மூன்றாம் திகதி மாலை ஆரம்பமாக உள்ளதாக யாழ். புகையிரத நிலைய அதிபர் ரி.பிரதீபன் தெரிவித்தார்

நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்று அபாய நிலை காரணமாக நாடு பூராகவும் புகையிரத சேவை நிறுத்தப்பட்டது.

யாழ் - கொழும்பு புகையிரத சேவையும் நிறுத்தப்பட்ட நிலையில் கல்கிசை-காங்கேசன் துறைக் கிடையிலான புகையிரத சேவை நாளை மறுதினம் மாலை ஆரம்பமாகவுள்ளதாக அவர் தெரிவித்தார்

எதிர்வரும் மூன்றாம் திகதி மாலை 5.30 மணிக்கு கல்கிசையில் இருந்து புறப்படும் புகையிரதம் காங்கேசன் துறையை வந்தடைந்து மறுநாள் 4 ஆம் திகதி காலை 5.30 மணி அளவில் காங்கேசன் துறையிலிருந்து கொழும்புக்கு பயணிக்கவுள்ளது.

யாழில் இருந்து கொழும்பிற்கு ஒரு சேவையும் கொழும்பில் இருந்து யாழிற்கு ஒரு சேவையுமாக சாதாரண புகையிரத சேவை மாத்திரமே முதலில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (4-5-33)

# நினைவுப் பேருரையும் மரம் நடுகை நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

அமரர் கலாநிதி க.கனகராசாவின் 94 ஆவது நினைவுப் பேருரை நிகழ்வும் யாழ்.மாவட்ட சாரணர் சங்கத்தின் மரம் நடுகை விழாவும் நாளை 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3 மணியளவில் யாழ்.சன்மார்க்க வித்தியாலத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட சாரணர் ஆணையாளர் இ.தவகோபால் (ஜே.பி) தலைமையில் இடம்பெறும். இந்த நிகழ்வில் வைத்திய கலாநிதி ச.நிர்மலன் பிரதம விருந்தினராகவும் கிளிநொச்சி மாவட்ட சாரண ஆணையாளர் மா.புவனேந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (4-5)

# மூன்று அம்ச கோரிக்கைகளை முன்வைத்து யாழில் நாளை கவனயீர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பொது மக்களினால் நாளை 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத்தில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த போராட்டம் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் வ.பிரபாகரனின் ஒருங்கிணைப்பில் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் வீட்டுத் திட்ட மிகுதிக் கொடுப்பனவு வழங்கப்படாமை, விவசாயிகளின் உரப்பிரச்சனை, கால்நடைகளுக்கான தீவனங்களின் விலை அதிகரிப்பு என்பவற்றிற்கு தீர்வுக்கோரி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (4-5)

# கழிவுகளை வீதியில் விடாது தரம் பிரித்து வையுங்கள்

## சாவ.நகரசபை உறுப்பினர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் பொறுப்பற்ற செயற்பாடு காரணமாக சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்கு வருவதாக சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் ம.நடனதேவன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற சுகாதாரக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பொதுமக்கள் பொறுப்பின்றி கழிவுகளை வீதிகளில் வீசுகின்றனர். தற்போது மழை காலம் ஆரம்பித்திருக்கும் நிலையில் இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகளால் சுகாதாரத் தொழிலாளர்கள் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது.

எனவே பொதுமக்கள் சுகாதாரத் தொழிலாளர்களையும் சக மனிதர்களாக மதித்து வீதிகளில் கழிவுகளை வீசுவதனைத் தவிர்த்து அதனை தரம் பிரித்து பாதுகாப்பாக பைகளில் கட்டி வீதி ஓரம் வைக்க வேண்டும்.

அவ்வாறு கட்டி வைக்கும் குப்பைகளை குறிப்பிட்ட நாட்களுக்குள் நகரசபையின் கழிவகற்றும் வாகனம் அகற்றாத பட்சத்தில் பொதுமக்கள் நகர சபை தவிசாளர்/ செயலாளர்/ வட்டார உறுப்பினருக்கு தெரியப்படுத்தும் பட்சத்தில் குப்பைகளை விரைவாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-5-30)

# மரக்கடத்தல் முறியடிப்பு



(கரணவாய்)

நெல்லியடியிலிருந்து வல்வெட்டித்துறைக்கு சட்ட விரோதமாக கடத்தி செல்லப்பட்ட வேப்பமரக் குற்றிகள் நெல்லியடி பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன் வாகன சாரதியையும் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு இடம் பெற்றது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.(4-5-60)

## கர்ப்பிணிகளுக்கு 380 ரூபாய்க்கு அங்கர்

(கரணவாய்)

புலோலி பலநோக்கு கூட்டுறவு சங்க எல்லைப் பரப்பிற்குள் வதியும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு 400 கிராம் அங்கர் பால்மா பைக்கெட் 380 ரூபாய்க்கு வழங்கப்படுகிறது.

கர்ப்பிணித் தாய்மார்கள் தங்களை அடையாளப்படுத்தி சங்கத் தலைமை அலுவலகத்தில் அங்கர் பால்மா பைக்கற்றை பெற்றுக்கொள்ள முடியும் என சங்கத் தலைவர் வி.ஜி தங்கவேல் தெரிவித்துள்ளார். (4-5-60)



யா/சாந்தை சித்தம்பலம் வித்தியாலயத்தில் வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தால் மாணவர்களின் பெற்றோர்களுக்கான கட்டாயக்கல்வி விழிப்புணர்வுக் கூட்டம் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்றது. குறித்த கூட்டத்தில் பாடசாலை அதிபர், வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி செயற்றிட்ட அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இராசிபலன்

01.11.2021
ஐப்பசி 15, திங்கட்கிழமை
ஏகாதசி முற்பகல் 10.05 மணிவரை
பூரம் முற்பகல் 10.22 மணிவரை
சுபநேரம்- 12.03-1.33 மணிவரை
இராகு காலம்- 7.33-9.03 மணிவரை
சந்திராஷ்டமம்- சதயம்
ஏகாதசி விரதம்

வளவன்


மேஷம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வழிபாடு காரிய வெற்றி தரும், தாழ்ந்த சுபாவமுண்டு.


ரிஷபம்

நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்


மிதுனம்

தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், காரிய அனுகூலமுண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், செய்தொழில் முன்னேற்றம் காணும் நாள்.


கடகம்

உங்களின் வார்த்தைகளை மற்றவர்கள் ஏற்று நடப்பர், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.


சிம்மம்

கற்பனை மிகுதியான நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், நண்பர்கள் சந்திப்பால் பெருமைப் படுவீர்கள்.


கன்னி

எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலையுண்டு, ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


துலாம்

எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.


விருச்சிகம்

முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.


தனுசு

செய்தொழில் நலன்கருதி புதிய முயற்சிகள் எடுப்பீர்கள், குடும்பத்தினரிடையே இருந்த குழப்பங்கள் விலகி குதூகலம் கூடும், தடைகள் விலகும் வாய்ப்புண்டு.


மகரம்

தடைப்பட்ட காரியங்களில் மாலை நேரம் முன்னேற்றம் காண்பீர்கள், செய்தொழிலில் அதிக ஈடுபாடு காட்ட வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.


கும்பம்

கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.


மீனம்

செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், தொழில் மேன்மையுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

உன் உடலை அன்பால் மட்டுமே அடக்கி ஆள முடியும்

# இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலையே

## மீண்டும் வலியுறுத்தினார் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

**எதிர்காலத்தில் மீண்டும் ஒரு இனப்படுகொலை எங்கும் நடக்கக் கூடாது. சாட்சியங்களின் அடிப்படையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இலங்கை தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் சனிக்கிழமை ஊடகங்களுக்கு வழங்கிய வாராந்த கேள்விப் பதிலின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இறுதி யுத்தத்தின் போது நடைபெற்றது இனப்படுகொலை தான் அது தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணையை வலியுறுத்தி எல்லா தமிழ் கட்சிகளுமே கடந்த காலத்தில் வலியுறுத்தி வந்தன.

அத்துடன், இலங்கையை சர்வதேச நீதிமன்றத்துக்கு பாரப்படுத்த வேண்டும் என்றும் எல்லா தமிழ்த் தேசிய கட்சிகளும் கூட்டாகக் கடிதம் ஒன்றில் கையொப்பமிட்டு ஐ.நாவுக்கு அனுப்பியுள்ளன.

இந்த பின்னணியில், Global Rights Compliance LLP (GRC) என்ற சட்ட வல்லுநர் அமைப்பு செய்திருக்கும் இந்த நடவடிக்கை மிகவும் சரியானதும் அத்தியாவசியமானதும் காலத்துக்குப் பொருத்தமானதும் ஆகும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தைத் ஸ்தாபித்த ரோம் சாசனத்தில் இலங்கை கையொப்பமிடாத போதிலும், இலங்கை தொடர்பில் பாதிக்கப்பட்ட 200 பேர் முறைப்பாடு செய்துள்ளார்கள் என்பதை 200 பேரின் சாட்சியங்களின் அடிப்படையிலும் மற்றைய சாட்சியங்களின் அடிப்படையிலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இலங்கை தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும் என அவ்வாறான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று உரிய சட்டக் கொள்கைகள், கோட்பாடுகள், வாதங்களுடன் இந்த முதலாவது தொடர்பாடலுக்கான ஆவணத்தை முறையாக Global Rights Compliance LLP (GRP) சமர்ப்பித்துள்ளது.

சட்ட கோட்பாடுகளின் அடிப்படையிலும், எதிர்காலத்தில் மீண்டும் ஒரு இனப்படுகொலை இலங்கையிலோ அல்லது உலகின் வேறு எந்த நாட்டிலுமோ நடக்கக்கூடாது என்பதை கவனத்தில் கொண்டும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்யும்.

வட கிழக்கு நிலங்கள் பறிபோகின்றன. பௌத்தர்கள் இல்லா இடத்தில் பௌத்த வணக்கஸ்தலங்கள் பலாத்காரமாக நிர்மாணிக்கப்படுகின்றன.

தொல் பொருளியலைத் திரிபுபடுத்தி தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்த இடங்களை சிங்கள பௌத்தர்கள் வாழ்ந்த இடங்களாக எடுத்துக் காட்டி பல ஏக்கர் காணிகளை தொல் பொருள் திணைக்களமும் கையகப்படுத்தி வருகின்றன.

அங்கு வாழும் தமிழ் மக்கள் இராணுவ ஒத்துழைப்புடன் விரட்டி அடிக்கப்படுகின்றனர். சிங்கள குடியேற்றம் தமிழர் தாயகத்தில் துரிதமாக நடைபெறுகின்றன. இனப்படுகொலையின் பல்வேறு பரிமாணங்கள் இவை. இவ்வாறான விசாரணைகளின் போது தற்போது இங்கு நடைபெறும் விடயங்களும் உண்மையை உலகம் உணர உதவி புரியும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# சிங்கள- பௌத்த நாடாக இலங்கையை மாற்ற முயற்சி

## பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பல்லினத் தன்மையை அடியோடு அழித்து - நாட்டை சிங்கள, பௌத்த தேசமாக மாற்றுவதற்கே ஜனாதிபதி செயலணியை நியமித்துள்ளார் என பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான ஜனாதிபதி செயலணிக்குள் தமிழர்களை உள்வாங்கும் விவகாரம் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

“தமிழின பற்றுள்ள, சுய கௌரவமுள்ள எந்தவொரு தமிழனும் இந்தச் செயலணியில் பங்கேற்கப்போவதில்லை என்பது நிச்சயமானது.

அவ்வாறு இருக்கையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் செந்தில் தொண்டமானும் செயலணியை ஏற்று அதில் தமிழ் உறுப்பினர்களை உள்ளீர்ப்பதற்கு துணையான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர்.

இதன் மூலம் ஏற்படவுள்ள பாரதூரமான விளைவுகளை இவர்கள் இருவரும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

முஸ்லிம்களுக்கான விவாக, விவாகரத்துச் சட்டம், தேசவழமைச்சட்டம், கண்டியச் சட்டம், முக்குவர் சட்டம் என்பன இந்த நாட்டில் காணப்படுகின்றன.



அவை இந்த நாட்டின் பல்லினத்தினை வெளிப்படுத்துவதாகும். அவ்வாறு இருக்கையில் அச்சட்டங்கள் அகற்றப்பட்டு ஒரே சட்டம் இயற்றப்பட்டால் நாட்டின் பல்லினத் தன்மை அடியோடு அழிக்கப்படும்” என அவர் சுட்டிக்காட்டினார். (நி)

# கட்டுப்படுத்த முடியாத வைரஸ் எதிர்காலத்தில் தோன்றலாம்

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

**(ஜெனீவா)**

**எதிர்காலத்தில் நம்மால் கட்டுப்படுத்த முடியாத மற்றொரு வைரஸ் வெளிப்படலாம் என்பதை உயிரியல் ரீதியான நிலைப்பாடுகள் உறுதி செய்கின்றன என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் எச்சரித்துள்ளார்.**




எனவே, மற்றொரு தொற்று நோய்க்கு தயாராகும் வகையில் தற்போதைய தொற்றிலிருந்து சர்வதேச சமூகம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

ஜி20 நாடுகளின் சுகாதாரம் மற்றும் நிதி அமைச்சர்களின் கூட்டத்தில் நேற்று முன்தினம் பேசும் போதே உலக சுகாதார அமைப்பு தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச அளவில் தொற்று நோய் நெருக்கடிகளை சிறப்பாகக் கண்டறிந்து கையாளக்கூடிய வகையில் வலுவான, அதிகாரமளிக்கப்பட்ட மற்றும் போதிய நிதி ஆதாரத்தைக் கொண்ட உலக சுகாதார அமைப்பு தேவை.

இது தொற்றுநோய்களுக்கு எதிரான விரைவான எதிர் நடவடிக்கைகளையும் சிறந்த நிர்வாகத்தையும் உறுதி செய்வதற்கான ஒரு வழிமுறை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

## "இந்தியா வாருங்கள்"
### போப்பாண்டவருக்கு மோடி அழைப்பு



(ரோம்)

ஜி 20 உச்சி மாநாட்டில் பங்கேற்க இத்தாலி சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி போப்பாண்டவர் பிரான்சிஸை இந்தியாவுக்கு வர அழைப்பு விடுத்தார்.

ஜி 20 உச்சி மாநாடு இத்தாலியின் ரோம் நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இந்த மாநாட்டில் இந்தியா உட்பட 20 நாடுகள் பங்கேற்றன.

இந்நிலையில் போப்பாண்டவர் பிரான்சிஸை பிரதமர் மோடி நேரில் சந்தித்து உரையாடினார்.

இது குறித்து அவர் டுவிட்டரில், "போப் பிரான்சிஸ் உடனான சந்திப்பு சிறப்பாக இருந்ததாகவும், சர்தேச விடயங்கள் குறித்து விவாதிக்க வாய்ப்பு அமைந்ததாகவும், அவரை இந்தியாவுக்கு வர அழைப்பு விடுத்துள்ளதாகவும் அதில் குறிப்பிட்டார். (நி-5)

## ஏடன் விமான நிலையம் அருகே வெடிப்புச் சம்பவம்-12 பேர் பலி

(ஏமன்)

ஏமன் தெற்கு துறைமுக நகரமான ஏடனின் சர்வதேச விமான நிலையத்தின் நுழைவாயிலுக்கு அருகில் ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தில் சுமார் 12 பேர் உயிரிழந்துள்ளனர்

நேற்று முன்தினம் சனிக்கிழமையன்று விமான நிலையத்தின் வெளிப்புற வாயிலில் ஒரு சிறிய டிரக் வெடித்து சிதறியதாக விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதே நேரத்தில் அந்த வாகனம் பெட்ரோலிய பொருட்களை ஏற்றிச் சென்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இருப்பினும் இந்த சம்பவம் திட்டமிட்ட தாக்குதலா? என்பது தெளிவாகத் தெரியவில்லை. (நி-5)

## முதன் முறையாக பொதுவெளியில் தோன்றினார் தலிபான் உயர் தலைவர் அகுந்த்சாதா



(காபூல்)

தலிபான் அமைப்பின் தலைவரான ஹைபத்துல்லா அகுந்த்சாதா முதல்முறையாக நேற்று முன்தினம் சனிக்கிழமை பொது வெளியில் தோன்றினார்.

ஆப்கானிஸ்தானின் தென் பகுதியில் அமைந்துள்ள கந்தஹார் நகரில் நடைபெற்ற கூட்டத்தில் தலிபான் ஆதரவாளர்கள் மத்தியில் அவர் உரையாற்றினார்.

தலிபான் அமைப்பின் தலைவரான ஹைபத்துல்லா அகுந்த்சாதா 2016 ஆம் ஆண்டு முதல் அந்த அமைப்பின் ஆன்மீக தலைவராக பொறுப்பு வகித்து வருகிறார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றிய பின்னரும் அவர் பொது வெளியில் தலைகாட்டாமல் இருந்து வந்தார்.

இதன் காரணமாக, அவர் இறந்துவிட்டதாகவும் சந்தேகங்கள் வெளியிடப்பட்டன.

இந்நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இராணுவத்தினர் மற்றும் ஆதரவாளர்களுடன் பேசுவதற்காக தாருல் உலூம் ஹக்கிமா மதரஸாவுக்கு தலைவரான ஹைபத்துல்லா அகுந்த்சாதா சென்றதாக தலிபான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவரது வருகையை ஒட்டி அங்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. புகைப்படமோ வீடியோவோ எடுக்க அனுமதிக்கப்படவில்லை.

ஆனால், அங்கு எடுக்கப்பட்ட 10 நிமிட வீடியோ தலிபான் சமூக வலைதளப் பக்கத்தில் பகிரப்பட்டது. அமீருல் மொமினீன் என்றழைக்கப்படும். அகுந்த்சாதா, அங்கு மதம் தொடர்பாகவே பேசியுள்ளார். அரசியல் குறித்து பேசவில்லை.

கடந்த 2016 ஆம் ஆண்டு, அமெரிக்க நடத்திய ட்ரோன் தாக்குதலில் அப்போது தலைவராக இருந்த முல்லா அக்கர் மன்சூர் கொல்லப்பட்டதை தொடர்ந்து, அகுந்த்சாதா தலிபான் இயக்க தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் வீழ்ந்த வாகனம்
### 13 பேர் சம்பவ இடத்தில் பலி



(உத்தரகாண்ட்)

உத்தரகாண்டின் சக்ரதாவில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் 13 பேர் உயிரிழந்துள்ளதுடன், நான்கு பேர் காயமடைந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வாகனம் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் வீழ்ந்தமையினாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

மாநில தலைநகரான டேராடூனில் இருந்து 170 கி.மீ தொலைவில் உள்ள சக்ரதா தெஹ்சில் தியுனியின் தொலைதூரப் பகுதியில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. (நி-5)

# 78 வீதமான நிலப்பரப்பில் இவ்வாண்டு சிறுபோக நெற்செய்கை

## கிளிநொச்சி நீர்ப்பாசன திணைக்களம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள 78.6 வீதமான நிலப்பரப்பில் இவ்வாண்டு சிறுபோக நெற்செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் காலபோகச் செய்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் இராஜகோபு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஒன்பது வரையான நீர்ப்பாசனக் குளங்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பராமரிக்கப்பட்டு வருகிறது அதாவது கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள இரணைமடு குளம், பிரமந்தனாறு குளம், கல்மடுக்குளம், கனகாம்பிகை குளம் உள்ளிட்ட நான்கு குளங்களும் மேற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள அக்கராயன் குளம், வன்னேரிக்குளம், குடமுருட்டிக்குளம், கரியாலை நாகபடுவான் குளம் உள்ளிட்ட ஐந்து குளங்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இதில் கீழ் உள்ள மொத்த நிலப்பரப்பில் இவ்வாண்டு 78.6 வீதமான நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டிலே 68.2 வீதமான நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் தெரிவித்தார். (4-5-315)

# திருட்டு மோ.சைக்கிளில் வந்தவர்களால் பருத்தித்துறையில் சங்கிலி அறுப்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி, தருமபுரம் பகுதியில் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று கடந்த 29 ஆம் திகதி திருட்டு போயுள்ளதாக தருமபுரம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருடப்பட்ட மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் பருத்தித்துறையில் வீதியால் வந்த வயோதிபர் ஒருவரின் தங்கச்சங்கிலி ஒன்றை அறுத்துச் சென்றுள்ளனர்.

இதனை அவதானித்த மக்கள் நெல்லியடி பொலிஸாருக்கு மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகட்டுடன் தகவல் வழங்கினர்.

தகவல் வழங்கியதையடுத்து நேற்று காலை சந்தேக நபர்களை கைது செய்ய சென்ற போது இருவர் தப்பியோடிய நிலையில் ஒருவர் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளார்.

தருமபுரத்தில் திருட்டுப்போன மோட்டார் சைக்கிளும் பொலிஸாரினால் மீட்கப்பட்டது. மேலதிக விசாரணையை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-316)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(நெளுக்குளம்)

வவுனியா மூன்று முறிப்பு பகுதியில் கேரள கஞ்சாவினை வைத்திருந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் கஞ்சா விற்பனை இடம்பெறுவதாக விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து நேற்று முன்தினம் குறித்த பகுதியில் தேடுதல் நடத்திய போது வீடொன்றில் இருந்து 3 கிலோ 700 கிராம் கேரள கஞ்சாவை மீட்டனர்.

அதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் அதேபகுதியை சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளிற்காக வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (4-5-299)

# கரைச்சி பிரதேச சபையின் 1299 ஏக்கர் நிலம் வனவள திணைக்களத்தின் வசம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 1299 ஏக்கர் நிலப்பரப்பு வனவளத் திணைக்களத்திடம் இருந்து விடுவிக்கப்பட வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரைச்சிபிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம், மலையாளபுரம், கிருஷ்ணபுரம், ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளில் ஏற்கனவே பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் யுத்த காலத்தில் கைவிடப்பட்டதன் காரணமாக 1299 ஏக்கர் நிலப்பரப்பு வனவளத் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்படி காணிகளை விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (4-5-315)

# ஒதியமலை கிராமத்திற்கு நடமாடும் வைத்திய சேவை வேண்டும்

## பொது அமைப்புக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒதியமலைக் கிராமத்திற்கு நடமாடும் வைத்திய சேவையினை நடத்துவதற்கு முல்லைத்தீவு மாவட்ட பிரதி சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒதியமலை கிராம பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

80 குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் 16 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலைக்கோ அல்லது 6 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள வவுனியா வடக்கின் நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலைக்கோ செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகிறது.

கடந்த பத்தாண்டுகளில் ஒதியமலைக் கிராமத்திற்கான பேருந்து சேவைகள் இடம்பெறுவதில்லை. போக்குவரத்து நெருக்கடியினையும் இம் மக்கள் எதிர்கொண்டுள்ளனர். மகப்பேறு, பாம்புக்கடி, காட்டு விலங்குகளின் தாக்குதல்கள், விபத்துகளின் போது வைத்தியசாலைகளுக்குச் செல்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

இந்நிலையில் நடமாடும் வைத்திய சேவை ஒன்றினை வாரத்தில் ஒரு நாள் நடத்துவதன் மூலம் ஒதியமலைக் கிராம மக்கள் நன்மை அடைவார்கள். இதற்கான நடவடிக்கையினை மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் எடுக்க வேண்டும் எனவும் ஒதியமலைக் கிராம பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-350)

# சிங்கள குடியேற்றங்கள் தொடர்பில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகம்



(குருமன்காடு)

வவுனியா வடக்கு சிங்கள குடியேற்றங்கள் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியால் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

வவுனியா பேருந்து நிலையப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் குறித்த துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

வவுனியா வடக்கில் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் வகையில் அரசாங்கம் முன்னெடுக்கும் குடியேற்றங்களால் தமிழ் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்தும் இதன் போது கட்சி உறுப்பினர்களால் தெளிவுபடுத்தப்பட்டது. (4-5-250)

# கிளிநொச்சியில் மட்டுப்படுத்தப்பட்ட அளவு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படும்

## நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை

(தருமபுரம்)

தற்போது பெய்து வரும் அதிக மழை காரணமாக கிளிநொச்சி குளத்திற்கு அதன் நீரோந்தும் பகுதிகளிலிருந்து அதிகளவான கலங்கிய நீர் வருவதனால் குடிநீருக்கான நீரை சுத்திகரித்து வழங்குவதில் நெருக்கடி நிலைகாரணமாக மட்டுப்படுத்தப்பட்ட குடிநீர் விநியோகமே மேற்கொள்ளப்படும் என கிளிநொச்சி மாவட்ட நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி முல்லைத்தீவு பொறியியலாளர் எந்திரி எஸ். சாரங்கன் தெரிவித்துள்ளனர்.

நாளாந்த நீர்த் தேவையின் மூன்றில் ஒரு பகுதியை மாத்திரமே தற்போது வழங்க கூடியதாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக பொது மக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்துவதோடு, கொதித்தாறிய நீரை பயன்படுத்துமாறும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாக மழை பெய்து கிளிநொச்சி குளத்திற்கான நீர் கலங்கிய நிலையில் வருமாயின் எதிர்காலத்திலும் இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்ட நீர் விநியோகநிலைமையே ஏற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-5-316-315)

# 40 லீற்றர் கசிப்புடன் இருவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரசாமிபுரம் பகுதியில் வீட்டில் மறைத்து கசிப்பு விற்பனை செய்யப்படுவதாகக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து தருமபுரம் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று சோதனையிட்ட பொழுது மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 20 லீற்றர் கசிப்பினையும் கைப்பற்றியதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவரையும் நேற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அதேவேளை வேறு ஒரு பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து 20 லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரிடமும் பொலிஸாரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (4-5-316)

# அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதியை நிறுத்த தீர்மானம்

(கொழும்பு)

**கிழங்கு, பருப்பு, சீனி, உட்பட அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கு டொலர் இல்லை என அத்தியாவசிய உணவு இறக்குமதியாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.**

இதனால் பல அத்தியாவசிய உணவுப் பொருட்களை இலங்கைக்கு கொண்டு வருவதனை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் நாட்களில் நாட்டில் அத்தியாவசிய இறக்குமதி பொருட்களுக்கு பாரிய தடுப்பாடு ஏற்படும். தட்டுப்பாடு காரணமாக பொருட்களின் விலை அதிகரிக்கும் என உணவு இறக்குமதியாளர் சங்க ஊடக பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்தார்.

தற்போது வரையிலும் டொலர் தட்டுப்பாடு காரணமாக சீனியை ஏற்றிவந்த கொள்கலன் துறைமுகத்தில் சிக்கியுள்ளதெனவும் சுட்டிக்காட்டினார்.

அத்தியாவசிய உணவு பொருட்களுக்காக குறைந்த பட்சம் 100 - 110 மில்லியன் டொலர் பணம் மாதாந்தம் செலவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## மின்சாரத்துறையை நிர்வகிப்பது அரசாங்கமல்ல; அமெரிக்காவே

### மின்சார தொழிற்சங்கம் சாடல்

(கொழும்பு)

நாட்டின் மின்சாரத்துறையை நிர்வகிப்பது அரசாங்கம் அல்ல. அமெரிக்காவுக்கு பங்குகளை விற்பனை செய்தன் காரணமாக அமெரிக்காவே நிர்வகிக்கிறது.

அதனாலேயே கடந்த வெள்ளியன்று வெளியான அதிவிசேட வர்த்தமானியில் மின்சாரத் துறையை அத்தியாவசிய சேவையாக உள்ளடக்கவில்லை என இலங்கை மின்சார சபையின் ஒண்றிணைந்த தொழிற் சங்கத்தின் ஏற்பாட்டாளர் ரஞ்சன் ஜயலால் ஊடகமொன்றிற்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வெள்ளியன்று வெளியான அதிவிசேட வர்த்தமானியில் முக்கியம் வாய்ந்த துறையான மின்சாரத்துறையை அத்தியாவசிய சேவையாக உள்ளடக்கப்படாமை விநோதமான விடயமல்ல.

ஏனெனில், மின்சாரத துறையை தற்போது நிர்வகிப்பது அரசாங்கம் அல்ல. அமெரிக்காவேயாகும். அரசாங்கம் நிர்வகித்தால் தானே, வர்த்தமானியில் சேர்த்துக்கொள்ள முடியும்" என தெரிவித்தார்.

அத்துடன் எதிர்வரும் 3 ஆம் திகதியன்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம். எவ்வாறாயினும் நாம் மின்சார விநியோகத்தை தடை செய்யமாட்டோம்.

ஏனெனில் அது சட்டவிரோத செயலாகும். எனினும், சகல மின்சார விநியோகத்துக்குரிய நடவடிக்கைகளையும் செய்துவிட்டு வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவோம்" என்றார். (நி)

### 6 வருடங்களின் பின்

## இலங்கை- பிரான்ஸ் நேரடி விமான சேவை ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கைக்கும் பிரான்ஸுக்கும் இடையிலான நேரடி விமான சேவை 6 வருடங்களின் பின்னர் நேற்று ஞாயிற்றுக்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் **UL 563** நேற்று அதிகாலை 1 மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பிரான்ஸின் பாரிஸ் விமான நிலையத்திற்கு புறப்பட்டது.

ஒவ்வொரு புதன், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பாரிஸ் விமான நிலையத்திற்கு செல்லும் என்றும் அதேநாளில் பிரான்ஸில் இருந்து இலங்கைக்கு மற்றொரு ஸ்ரீலங்கன் விமானம் வரவுள்ளதாகவும் சுற்றுலா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

1980களில் இலங்கைக்கும் பிரான்ஸுக்கும் இடையிலான முதலாவது நேரடி விமான சேவை ஆரம்பிக்கப்பட்டது.

அதன்பின்னர் 2015 இல், இந்த நேரடி விமானங்கள் நிறுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 160 | 170 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 160 | 140 | 140 | 140 |
| தக்காளி | 250 | 220 | 200 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 40 |
| கோவா | 180 | 130 | 150 | 200 |
| கரட் | 100 | 220 | 200 | 240 |
| பூசணி | 60 | 50 | 50 | 60 |
| புடோல் | 250 | 200 | 140 | 200 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 200 | 150-240 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 190 | 160-200 | 240 |
| பாகற்காய் | 350 | 500 | 330 | 320 |
| வெண்டிக்காய் | 160 | 130 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 300 | 300 | 250 | 320 |
| லீக்ஸ் | 200 | 260 | 230 | 250 |
| பீற்றூட் | 100 | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 250 | 320 | 280 | 350 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 150 | 200 |
| போஞ்சி | 300 | 260 | 240 | 250 |
| கத்தரிதம்புள்ள | 160 | 160 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 80 | 100 |
| தேசிக்காய் | 480 | 450 | 450 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 40-70 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | -- | 300 | -- | 300 |
| முள்ளங்கி | 140 | 120 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 100 | 30 | 20 |
| ஈரப்பலா | -- | -- | -- | 120 |

### ஒரே நாடு: ஒரே சட்டம்

## செயலணிக்குழு தொடர்ந்து இயங்கினால் என்னால் சேவையாற்ற முடியாது- அலிசப்ரி



(கொழும்பு)

ஞானசார தேரர் தலைமையிலான ஜனாதிபதி செயலணிக்குழு தொடர்ந்தும் இயங்கினால், தன்னால் நீதியமைச்சராக சேவையாற்ற முடியாது என அலி சப்ரி தெரிவித்தார்.

ஒரே நாடு - ஒரே சட்டம் என்ற எண்ணக்கருவை முன்னெடுத்துச் செல்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணிக்குழுவின் தலைவராக கலகொட அத்தே ஞானசார தேரர் நியமிக்கப்பட்டமை குறித்து நீதியமைச்சர் அலி சப்ரி தனது எதிர்ப்பை அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளார்.

முஸ்லிம் சமூகத்தின் சமய தலைவர்களான மௌலவிகள், அமைச்சரிடம் தமது கடும் எதிர்ப்பை முன்வைத்துள்ளதையடுத்து, அமைச்சர் தனது எதிர்ப்பை அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளார். (நி-5)

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் ஐந்து வாகனங்கள் மோதி விபத்து

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பொலிஸ் விஷேட அதிரடிப்படையின் 1969 அம்புலன்ஸ் வாகனம் ஒன்று உட்பட 5 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த விபத்தானது கெலனிகம 12.3 ஆம் கட்டைக்கு அருகில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தின் போது 5 பேர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். காயமடைந்தவர்கள் ஹோமாகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நி-5)



# உலகை மிரட்டும் புதிய வைரஸ்

# இலங்கையிலும் பரவும் அபாயம்

(கொழும்பு)

**உலக நாடுகளை தற்போது அச்சுறுத்தி வரும் A.30 என்றழைக்கப்படும் கொரோனா தொற்றின் புதிய திரிபு தொடர்பில் இலங்கையிலும் அச்சுறுத்தல் நிலை இருப்பதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.**



திருமணக் கொண்டாட்டங்கள் மரணச் சடங்குகளின் போது சுகாதார விதி முறைகள் மீறப்படும் போது குறித்த வைரஸ் வேகமாக பரவும் அபாயம் உள்ளது என கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

A.30 எனப்படும் குறித்த வைரஸ் பைஸர், அஸ்டா ஜெனெகா உட்பட்ட பிரதான தடுப்பூசிகளுக்கு கட்டுப்படாது பரவும் தன்மை கொண்டது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

புதிய திரிபு பரவலடைந்தால் பாரிய நெருக்கடியைச் சந்திக்க நேரிடுமென்று முழு உலகமும் எச்சரிக்கை நிலையுடன் செயற்பட்டு வருகிறது. இதனால் இலங்கையில் வாழும் மக்களும் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

கொரோனா முற்றாக நிறைவுக்கு வந்து விட்டது என்று எண்ணி மக்கள் செயற்பட்டால் மேலும் நான்கே வாரங்களில் இத் திரிபால் பாதிக்க நேரிடும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (நி)

## இன்று முதல் மூன்றாவது தடுப்பூசி

(கொழும்பு)

நாட்டில் கணிசமானவர்களுக்கு இரண்டு தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டுள்ள நிலையில் மூன்றாவது தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதன் அடிப்படையில், சுகாதாரத் தரப்பினர், படைத்தரப்பினர் உட்பட்ட முன்வரிசை செயற்பாட்டாளர்களுக்கு 3 ஆவது தடுப்பூசி செலுத்தும் பணி ஆரம்பமாகிறது என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றுலாத்துறைகளில் பணியாற்றுபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் தெரிவித்தார். இதுவரை ஒரு மில்லியன் பைசர் தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், வாரந்தோறும் 400,000 தடுப்பூசிகள் இலங்கையை வந்தடையவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

## மாணவர்களின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் சில வாரங்களில் பாடசாலை கல்வி நடவடிக்கைகளை வழமை போன்று மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் என கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

இதுவரை இரண்டு கட்டங்களின் கீழ், நாட்டின் அனைத்து ஆரம்ப பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் மாணவர்களின் வருகையில் முறையான அதிகரிப்பை காண முடிந்தது.

ஆசிரியர்களின் மற்றும் அதிபர்களின் வருகையும் சிறந்த மட்டத்தில் காணப்படுவதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார். (நி-5)

## சீரற்ற காலநிலையால் இருவர் பலி, 5100 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் பல பகுதிகளில் நிலவும் கடும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக இதுவரை 2 பேர் உயிரிழந்தனர். மேலும் 2 பேர் காயமடைந்தனர்.

அத்துடன், 5100 இற்கும் மேற்பட்டோர் சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

3 வீடுகள் முழுமையாகவும் 347 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, புத்தளம் மாவட்டம் - நுரைச்சோலை பகுதியில் நேற்று காலை வரையான 24 மணித்தியாலங்களில் நாட்டில் அதிகபட்சமாக 215 மில்லிமீற்றர் பாரிய மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-5)

## இன்று ஒரு தகவல்

# கவலை வேண்டாம்

எதிரே சடாரென்று ஒரு வாகனம் வந்து விட்டது என்பதற்காக என்ன செய்வதென்று தெரியாமல் அயர்ந்து போய் நின்று கொண்டிருந்தால் என்ன ஆகும்? சட்டென்று விலகவோ வேறு வழிகளைத் தேடவோ முற்பட வேண்டாமா?

சிலர் கவலைகளைச் சந்தித்ததும் அப்படியே அயர்ந்து போய் விடுவார்கள். அதற்கு வழி காணவும் முயல்வதில்லை. கவலையென்னும் வாகனம் அவர் மீது மோதி அவர் மனதைச் சின்னாபின்னமாக்கி விடுகிறது. கவலைகளில் இரண்டு பிரிவுகள். தீர்க்க முடியாத கவலைகள். தீர்வு காணக்கூடிய கவலைகள். தீர்க்கவே முடியாத கவலை என்பது என்ன தெரியுமா? உயிரிழப்பு ஒன்று தான். மற்ற எந்தக் கவலையாக இருந்தாலும் அதை நம் திறமையினால் சமாளித்து விடலாம்.

தீர்க்கவே முடியாத கவலை கூடக் கொஞ்ச நாளாகிவிட்டால் சரியாகிவிடும். தீர்க்கவே முடியாத கவலைகள் கூட சாதாரணமாகி விடும் போது தீர்க்கக்கூடிய கவலைகள் எம் மாத்திரம். ஆனால் ஒன்று மட்டும் உறுதி. கவலைகளைக் கண்டு நாம் அச்சம் அடைய அவை பெரிய கவலைகளாக பூதாகாரப் பிரச்சினைகளாக உருவெடுக்கின்றன. அதே நேரத்தில் துணிவுடனும் திறமையுடனும் அணுகும் போது அக்கவலைகள் சக்தியற்றனவாக ஆகிவிடுகின்றன.

முயற்சியில் தோல்வி அடைபவர்கள் கவலை கொள்வது சகஜம். முயற்சி என்பது காசைச் சுண்டிப்போடுவது மாதிரி. தலை விழுந்து வெற்றி காண்பதும் பூ விழுந்து தோல்வி காண்பதும் நம் கையில் இல்லவே இல்லை.

எதற்கும் நாம் தயாராகி விடுவது தான் கவலையிலிருந்து விடுதலைபெற சிறந்த வழியாகும். கவலை என்னும் தீய பொருளுக்கு உடல்நலம் என்னும் அரும் பொருளை விலையாகக் கொடுக்கிறீர்கள் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

எந்தக் கவலைகள் மனதில் தோன்ற ஆரம்பித்தாலும் அவற்றிற்கான சிந்தனையில் இறங்கி விடிவுகாண வேண்டும். நிச்சயம் வழிபிறக்கும்.

இப்படி ஆகிவிட்டதே ? அப்படி ஆகிவீடுமோ? என்றெல்லாம் எண்ணுவதை விடுத்து இனி என்ன செய்யலாம்? என்று எண்ணுவதே நலம் பயக்கும்.

நடந்துவிட்ட கவலை தரக்கூடிய விடயங்களைத் தீய கனவுகளாக எண்ணிக் குழிதோண்டிப் புதைக்க வேண்டும். அந்தப் புதைவிடத்தின் மேலே அனுபவம் என்னும் துணையுடன் நம்பிக்கை என்னும் அரும்புகள் மலரச் செய்யவேண்டும்.

கவலைகள் என்பன இரயில்கள் மாதிரி. அவை வாழ்க்கை என்னும் ஸ்டேஷனுக்கு அடிக்கடி வரும் போது ஸ்டேஷன் மாஸ்டராக இருந்து நாம் அவற்றை வரவேற்கவும் வழியனுப்பவும் தயாராகிவிட வேண்டும். அந்த மனப் பக்குவத்தை நாம் வளர்த்துக் கொள்ளாவிட்டால் ஏகப்பட்ட இரயில்கள் ஸ்டேஷனில் சேர்ந்துவிடும். பின்னர் பிரச்சினைகளுக்குக் கேட்கவா வேண்டும்?

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## ஓநாயும் முயலும்

காட்டில் குட்டி முயல் ஒன்று தத்தி தத்தி சென்று கொண்டிருந்தது. தாவிக் குதித்து பசும் புல்லைத் தேடி யது.

அப்போது, "உதவி... உதவி... என்னைக் காப் பாற்றுங்களேன்..." என்ற பரிதாபக் குரல் கேட்டது.

இரக்க சுபாவமுள்ள முயல் நின்று நிதானித் தது. குரல்வரும்திசையை நோக்கி, "யார் வேத னைக்குரல்எழுப்புறது... இதோ வருகிறேன்..." என்றபடி ஓடியது.

புதரின் அருகே கண்ட காட்சியால், திடுக்கிட் டது முயல். பெரிய பாறையின் அடியில் சிக்கித் திணறி, முனகிக் கொண்டிருந்தது ஓநாய்.

முயலைக் கண்ட தும், "காப்பாத்து... என் மேலிருக்கும் பாறையை நகர்ந்தேன்... மூச்சு விட முடிய வில்லை..." என, திக்கித் திணறியது ஓநாய்.

அதைப் பார்க்க, பரி தாபமாக இருந்தது. துஷ்டப் பயலான ஓநா ய்க்கு உதவ முயன்றது குட்டி முயல் பாறையை நகர்த்தும் பணியில் முழு மூச்சுடன் முயன்றது.

அப்போது காதைப் பிடித்து, யாரோ தூக் குவதை உணர்ந்தது கல வரத்துடன் கண்ணை திறந்த போது, பாறை யின் அடியில், மூச்சு திணற அவஸ்தைப் பட்டு மீண்ட ஓநாயின் கையில் இருப்பதை கண்டது.

ஏளனமாகச் சிரித்த படி, "உன்னை, உணவா க்கிக் கொள்ளப் போகி றேன்..." என, நாக்கைச் சப்புக்கொட்டியது ஓநாய்



நடுங்கியபடி கண் ணீ ருடன், "தயவு செய்து, என்னை சாப்பிட்டு விடாதே... உன்னை ஆபத்திலிருந்து காப் பாற்றினேனே... அதற்கு இதுவா கைமாறு..." என, குழறியது குட்டி முயல்.

"இந்த நியாய மெல் லாம் நாங்கள் பார்ப் பதில்லை. பசிக்கும் போது, கிடைப்பதை தின்பது தான் என் பண்பாடு தெரிந்ததா..." என்றது, கெட்ட புத்தி ஓநாய்.

"தயவுசெய்து அந்த குட்டையில் வசிக்கும் வாத்திடம் கேட்டுப் பார்.

உதவிய என் னையே, உன் பசிக்கு இறையாக்குவது நியா யமா என கேட்போம். அது சொல்லும் தீர்ப் பைக் கேள்..."

அதிசயமாக, அதற்கு உடன்பட்ட ஓநாய், "சரி... சரி... வா... சீக் கிரம் முடிக்கணும் என க்கு நல்ல பசியாயிரு க்கு..." என்று கூறிய படி, குட்டையில் உல் லாசமாக நீந்திக் கொண் டிருந்த வாத்திடம் போனது.

விவகாரத்தை கேட் டதும், "நீங்கள் இருவ ரும் கூறுவது எதுவும் புரியவில்லை.. ஓநாயை, எந்த சூழ்நிலையில் நீ பார்த்தாய்..." என்றது வாத்து.

(தொடரும்)

# மகாபாரதம்




குருவி "இப்படிச் சாந்தி ஏற்படாது. எதிரி தன்னை சமாதானப்படு த்தி விட்டான் என்று கருதி அவனை நம்பவே கூடாது.

ஆகவே இனி இங்கு நான் என் முகத்தைக் காட்டக் கூட விரும்ப வில்லை" என்று கூறி ற்று. "ஓ பூஜனியே, நாயைக் கொன்று தின்று வாழும் கீழோன் நாயையே வளர்த்து வருகிறான். அவனிடம் நாளடைவில் நாய் நட்பாகி விடுகிறது.

அதுபோலவே வைராக்கியத்துடன் இருக்கும்இருவர்இணை ந்து வாழ்வாரானால் வைராக்கியம்மாறி நாள டைவில் நட்பு நிலை த்து விடும்" என்று கூறினான் பிரமதத்தன்.

இதுகேட்ட பூஜனி "ஓ.. மன்னனே.. வைராக் கியம் ஐந்து காரணங்க ளால் ஏற்படும். ஒன்று- பெண்டிர் காரணமாகத் தோன்றும். இரண்டு- நிலம், தோட்டம், வீடு முதலான பொருள் களுக்காக ஏற்படும்.

மூன்று-வாய்ப்பேச்சு காரணமாக எழும், நான்கு-பிறவியிலேயே தோன்றுவது ஐந்து- எப்போதோ நேர்ந்த குற் றத்திற்காக உண்டாகும்.

இவற்றில் எவ்விதத் தில் வைராக்கியம் ஏற் பட்டாலும்-தவறு செய் தவன் மன்னனே ஆனா லும் அவனிடம் நம்பி க்கை வைக்கக்கூடாது.

வைராக்கியம் என் னும் தீயை நன்மொழிக ளாலோ, சாத்திரத் தாலோ போக்க முடி யாது. அத்தீயை யாரா லும் அணைக்க முடி யாது. ஆகவே இனி உன்னை நம்ப மாட் டேன்" என்றது.

அது கேட்ட பிரம தத்தன் பூஜனியை நோக்கி "குருவியே! எல் லாம் காலத்தின் செய ல்கள் தான்.

நீயோ, நானோ எத ற்கும் காரணமாவதி ல்லை. மனிதன் காலத் தால் பிறக்கிறான். காலம் முடிந்ததும் இற க்கிறான். இது போலத் தான் எல்லாம் காலா காலத்தில் நிகழ் கின்றன.

தீயானது விறகை எரி ப்பது போலக் காலம் எல்லாவற்றையும் எரிக் கிறது. தோற்று விக்கி றது - மறைக்கச் செய் கிறது - மறக்கச் செய் கிறது.

எனவே ஒருவருக்கு ஏற்படும் நன்மை தீமைகளுக்கு வேறு யாரும் காரணமில்லை. காலம்தான் காரணம்.

இதை புரிந்து கொண்டு நட்போடு இரு. நீ செய்ததை நான் பொறுத்தது போல், என் மகன் செய்ததை நீயும் பொறுத்துக் கொள்" என்றான்.

ஆனால், பூஜனி விடவில்லை. "எல்லாம் காலம்தான் என்றால், எல்லோரும் ஏன் இப் படி தவிக்கிறார்கள்? அனைத்திற்கும் காலமே காரணம் என்பது உண் மையானால் நோய் உற்றவர் ஏன் மருத்து வரை நாட வேண்டும்? காலத்தின் விளைவு என் றால் உற்றார், உறவினர் இழப்புக்கு ஏன் அழ வேண்டும்? காலமே காரணமானால் புண் ணியம் சம்பாதிக்க யாருக்குத் தான் மனம் வரும்? என் குழந்தை யைக் கொன்ற உன் மகனை நான் துன்பு றுத்தினேன். இதற்காக என்னை நீ துன்புறுத் துவாய்.. கொல்வாய்..

(தொடரும்)

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.

– கோன்பு தஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மன்னவனும் நீயோ! வளநாடும் உன்னதோ!

யாம் அறிந்த புலவர்களிலே கம்பனைப் போல் வள்ளுவனைப்போல் இளங்கோவைப் போல் யாங்கனுமே கண்டதில்லை என்றான் பாரதி.

கம்பன் கவிச்சக்கரவர்த்தி. கம்பராமாயணத்தைத் தந்தவன்

இராமனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு கம்பன் தந்த கம்பராமாயணத்தில் சமயங்கள் இனங்காட்டப்படுகின்றன.

இன்னும் சற்று நுணுகி ஆராய்ந்தால், வைஷ்ணவக் கடவுள் அவதாரமாகிய இராமன், சிவபக்தனாகிய இராவணனை சங்காரம் செய்து வென்றதாகக் காட்டி வைஷ்ணவத்தை முதன்மைப்படுத்துகின்ற முனைப்பு நடந்தது என்றும் கூறலாம்.

மாறாக, வள்ளுவப் பெருமான் திருக்குறளைத் தந்து வான்புகழ் கொண்டவர்.

திருக்குறளோ பொய்யாமொழி, பொதுமறை எனப் போற்றப்படுவது. இனம், மதம் என்ற பேதமைக்கு திருக்குறளில் இம்மியும் இடமில்லை.

அப்படியானால், பாரதி தன் பாடலில் வள்ளுவனைப்போல், கம்பனைப்போல், இளங்கோவைப்போல் என்றுதான் பாடியிருக்க வேண்டும்.

அதுவே ஏற்புடைய நியாயமாக இருந்திருக்கும்.

ஆனால், கம்பனை முதன்மைப்படுத்த வேண்டிய தேவை பாரதிக்கு ஏன் ஏற்பட்டது என ஆராயும்போதுதான் கம்பனின் வீரம் முன்னெழுகிறது.

ஆம், சோழ மன்னனுடன் கருத்து முரண்பாடு ஏற்பட்டபோது மன்னன் என்று கம்பன் பயந்திலன்.

மாறாக சோழ மன்னனை எதிர்த்துப் பேசுகின்ற வீரனாக – மானமுள்ளவனாக கம்பன் எழுந்து நின்றான்.

நாடாளும் மன்னன் என்ற இறுமாப்பில் இருந்த சோழ மன்னனைப் பார்த்து; மன்னவனும் நீயோ! வளநாடும் உன்னதோ!... என்று ஆக்ரோசத்துடன் கேட்ட கம்பன் மீது; அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் எவருக்கும் விருப்பம் ஏற்படவே செய்யும்.

ஆதலால்தான் கம்பனைப்போல் வள்ளுவனைப் போல்... என்று பாரதி பட்டியல்படுத்துகின்றான் என்ற தீர்ப்புக்கு நாம் வரமுடியும்.

இதை நாம் கூறும்போது, அது சரி பாரதி தன்பாடலில் கவிஞர்களைப் பட்டியல்படுத்தியது தொடர்பில் இப்போது என்ன பிரச்சினை என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

இங்குதான் இந்த நாட்டின் நீதி அமைச்சர் அலி சப்ரி தொடர்பிலான எண்ணப் பதிவு முன்னெழுகிறது.

ஆம், நீதியமைச்சர் அலி சப்ரி அவர்களின் செயற்பாடுகள் பலவற்றில் எமக்கு உடன்பாடு இல்லாத விடயங்கள் நிறையவே உண்டு.

ஆயினும் ஒரே நாடு – ஒரே சட்டம் என்பதை உருவாக்குவதற்கான ஜனாதிபதி செயலணியில் ஞானசார தேரர் இடம்பெறுவாராக இருந்தால், என்னால் நீதியமைச்சராகத் தொடர்ந்து செயற்பட முடியாது என அமைச்சர் அலி சப்ரி கூறியிருப்பதானது அவரின் வீரத்தை – தன்மானத்தை – முஸ்லிம் இனத்தின் மீதான அவரின் இறுக்கமான பற்றுதலை பளிச்சிட்டுக் காட்டுகிறது.

இப்படியான இனப்பற்றுடைய அரசியல்வாதிகள் இருப்பதனால்தான் முஸ்லிம் மக்கள் தொடர்பில் சிங்களப் பேரினவாதிகள் எதுவும் செய்ய முடியவில்லை.

ஆனால் இத்தகு அரசியல்வாதிகளுக்கு நம் தமிழ் மக்கள் தவம் கிடக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். என்ன செய்வது.

## அனுராதபுரம் மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் 30 பேருக்கு கொரோனா

(அனுராதபுரம்)

அனுராதபுரம் மாவட்டத்தின் ஹொரவபொத்தான, தம்புத்தேகம மற்றும் பதவிய பிரதேசங்களில் இயங்கும் ஆரம்ப பாடசாலைகளில் பயிலும் 30 மாணவர்கள், மூன்று ஆசிரியர்கள் மற்றும் அதிபர் ஒருவருக்கு கோவிட் வைரஸ் தொற்றியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அனுராதபுரம் மாவட்ட தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் மருத்துவர் ஆர்.எம்.எஸ்.பி. ரத்நாயக்கவும் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

இவர்களில் உடல் நலம் குறைந்தவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஏனையோர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் இந்த கோவிட் தொற்றாளர்களுடன் சம்பந்தப்பட்டிருந்த சுமார் 100 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் மருத்துவர் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## நாட்டில் மேலும் 542 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

நாட்டில் மேலும் 542 கோவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 541,073 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## அதிகூடிய மழைவீழ்ச்சி தெல்லிப்பழையில் பதிவு

(குப்பிழான்)

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 08.30 மணி முதல் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணிவரையான 24 மணித்தியாலங்களில் யாழ்.மாவட்டத்தில் தெல்லிப்பழையில் அதிகூடிய மழைவீழ்ச்சியாக 152.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக திருநெல்வேலி வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

மேற்படி காலப்பகுதியில் அச்சுவேலியில் 99.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பருத்தித்துறையில் 71.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் திருநெல்வேலியில் 69.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிப் பகுதியில் 67.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் நயினாதீவில் 64.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் நெடுந்தீவில் 60.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் 58.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் சாவகச்சேரியில் 34.9 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளன எனவும் அவர் மேலும் கூறினார். (ஞா-18,33)

## கனகாம்பிகைக்குளம் வான்பாயக்கூடும் மக்களுக்கு எச்சரிக்கை

(கிளிநொச்சி)

வடக்கில் தொடரும் மழையினால் கிளிநொச்சியின் கனகாம்பிகைக் குளம் வான்பாய்வதற்கான சாத்தியம் காணப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

இதனால் கனகாம்பிகைக்குளத்தின் நீர் வெளியேறும் தாழ் நிலப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஞா)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** கப்பூது, தில்லையம்பலம், யாக்கரு நூலகம் ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** 68 ஆவது பிரிவு டயலொக் கோபுரம், இரணைப்பாலை, தேவிபுரம் 18வது வி.ஜ.ஆர். இராணுவ முகாம், தேவிபுரம், 68ம் பிரிவு இராணுவ முகாம், இரணைப்பாலை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2021

**“ மரங்களை நாட்டுவதற்கான மிகச்சிறந்த காலம் 20 வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்.**

**- சீனப்பழமொழி**

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### பிறப்பின் நோக்கம்



ஆறாவது அறிவைக் கொண்ட இந்த மனிதன் வாழ்வின் நோக்கம், அறிவு முழுமை பெற வேண்டும். இயற்கையின் முழுமையை உணர வேண்டும், எந்தச் சக்தியிலிருந்து நாம் தோன்றி, வந்து இயங்கிக் கொண்டிருக்கிறோமோ அந்த அடிப்படையை உணர்ந்து அதோடு லயமாகி இணைந்து கொள்ள வேண்டும் என்பதேயாகும். இதுதான் பிறப்பின் நோக்கம். **(This and this alone is the purpose of life).**

சுருங்கச் சொன்னால் இயற்கையானது பல படித்தளமான பரிணாம இயக்கத்திலே தோற்றங்களாகி, ஓரறிவு முதற்கொண்டு ஆறறிவு வரையிலே வந்து மனிதனாகி, தன்னுடைய மதிப்பையும், தன்னுடைய தகைமையையும், தன்னுடைய அழகையும் ரசிக்கவும், உணரவும் அந்த இயற்கையே எடுத்துக் கொண்ட ஒரு உன்னதமான வடிவம் எதுவோ அதுதான் மனிதன்.

மனிதனில் தான் அறிவினுடைய முழுமையைப் பெற முடியும். பழக்கத்தின் வழியே நாம் சிக்கி, தேவை, பழக்கம், சூழ்நிலையின் கட்டாயம் (நிர்ப்பந்தம்). இந்த மூன்றினாலும் உந்தப்பட்டுச் செயல் செய்து கொண்டிருக்கிறோம். இவற்றிலிருந்து விளக்கம் பெற்று, விளக்கத்தின் வழியே நாம் வாழ்க்கையை மாற்றி அமைக்க வேண்டுமானால் உடனடியாக விளக்கம் வராது, பழக்கத்திலிருந்து உடனடியாக மாறி விடவும் முடியாது. முறையான பயிற்சி வேண்டும். விளக்கத்திலேயும் பயிற்சி வேண்டும். அப்படி விளங்கிக் கொண்ட பிறகு நாம் எங்கே இருக்கிறோம், எங்கே போக வேண்டும், அதிலுள்ள வேறுபாடு, தூரம் என்ன என்பதைக் கண்டு, படிப்படியாகத் தன்னை மாற்றி உயர்த்தி அந்த இடத்தை அடைய வேண்டும். அத்தகைய திருப்பம் எதுவோ அது தான் பக்தி மார்க்கம், ஞான மார்க்கம் எனப்படும் ஆன்மீக வாழ்வு ஆகும்.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2021
கொரோனா கற்றுத்தந்த பாடம்
'இயற்கையை நாம் அழித்தால்
இயற்கையால் நாம் அழிவோம்'
OXFORD
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகை மாதத்தில் காந்தளின் துளிர்ப்பைப் போல
நம்பிக்கையின் விதைப்பாக மரங்களை நாட்டுவோம்
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

## 69 குடும்பங்...

றுறை, தெல்லிப்பளை, சங்கானை, சண் டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 69 குடும்பங்களைச் சேர்ந்த 247 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, நான்கு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்டோரின் விபரங்கள் அந் தந்த பிரதேச அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மத்திய நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ஞா-18,33)

## பலத்த மழை...

நிலைகொண்டிருக்கும் என வளிமண்டல வியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

"வடக்கு, வடமத்திய, வடமேல், கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் அவ்வப் போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

சில இடங்களில் 100 மில்லிமீற்றருக் கும் அதிகமான பலத்த மழை பெய்யக். கூடும்.

மின்னல் மற்றும் காற்றினால் ஏற்படக் கூடிய விபத்துக்களை குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் பொது மக்களை எச்சரித்துள்ளது. (ஞா)

## கொடிகாமத்தில்...

சற்குருநாதன் (வயது-78) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திய இளைஞனான கிருஸ்ணகுமார் சுகிந்தன் (வயது-27) என்பவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
















இவ் விபத்து தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண் டுள்ளனர். (ஞா-18,30,33,60)

## 18 பேர்...

இதுவரையில் கொரோனாவால் உயிரிழந் தோர் எண்ணிக்கை 13 ஆயிரத்து 743 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## போக்குவரத்து...

பொதுப் போக்குவரத்து சேவையில் சமூக இடைவெளியை பேண வேண்டும் என்பதற்கான விசேட திட்டங்கள் செயற் படுத்தப்படவுள்ளன. 6 ஆயிரம் அரச பேருந்துகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தப்படும் எனவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கோவிட்-19 வைரஸ் தாக்கத்தைக் கருத்திற்கொண்டு மாகாணங்களுக்கிடை யில் சுமார் 6 மாத காலமாக அமுல்படுத் தப்பட்டிருந்த பயணத்தடை நேற்று தளர்த் தப்பட்டுள்ளது.

கடுமையான நிபந்தனைகளுக்கு மத்தியில் பொதுப் போக்குவரத்து சேவை யினை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட் டுள்ளது.

ஆகவே சுகாதார பாதுகாப்பு அறிவுறுத் தல்களை பயணிகளும், பொதுப் போக்கு வரத்து சேவை சாதனங்களின் நடத்துநர் மற்றும் சாரதிகள் பின்பற்ற வேண்டும். புகையிரத போக்குவரத்துச் சேவை மாகா ணங்களுக்கிடையிலான புகையிரத போக்குவரத்துச் சேவை இன்று முதல் ஆரம்பமாகும் என்றார். (ம-3)

## தரம் ஐந்து...

தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து ஏனைய மாணவர்களுக்கும் பிசிஆர் பரி சோதனை முன்னெடுக்கப்படவுள்ளது. (ஞா-299)

## ஸ்கொட்லாந்தில்...

லாந்தில் நடைபெறவுள்ளது.

பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஒழுங்கமைப்பில் காலை முதல் மாலை வரை இந்த எதிர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இப்போராட்டத்திற்கு தமிழ் மக்கள் அனைவரும் பேரெழுச்சியுடன் அணி திரண்டு வையகம் அதிர்ந்திட உரத்துக் குரல் கொடுக்க வேண்டும் என நாம் தமி ழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப் பாளர் சீமான் உரிமையுடன் உலகத் தமி ழர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். (ஞா)

## 44 பேருக்கு...

தொடர்ந்தும் அடையாளம் காணப்பட்டு வரும் நிலையில் மேலும் 31 பேருக்கு நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் வடக்கு மாகா ணத்தில் 44 தொற்றாளர்கள் அடை யாளம் காணப்பட்டுள்ளனர். (ஞா)

## மீண்டும் ஆபத்து...

சோதகர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. அதன் தலைவர் உபுல் ரோஹண ஊடகங் களுக்கு இதனைக் குறிப்பிட்டார்.

"சில பகுதிகளில் கோவிட்-19 நோய்த் தொற்றுப் பரவல் அதிகரிப்பதற்கான அறி குறிகள் காணப்படுகின்றன.

எனவே, பொதுமக்கள் தற்போதைய் நிலைமையைப் புரிந்துகொண்டு சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைய தமது அன் றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என்றும் பொதுச் சுகாதார பரி சோதகர்கள் சங்கத்தின் தலைவர் வலி யுறுத்தினார். (ஞா)

## தமிழ்க் கட்சி...

தும் கட்சிகள் யாழ்ப்பாணத்தில் ஒருங் கிணைந்து நாளை இறுதி செய்யவுள் ளன.

இந்தக் கடிதத்தினை இறுதி செய்யும் ஒருங்கிணைவுக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி அதன் அரசியல் பீடத்தில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்திற்கு அமை வாக பங்கேற்கப்போவதில்லை என்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

எனினும், ஏற்கெனவே திட்டமிட்டபடி குறித்த ஒருங்கிணைவுக் கூட்டம் நடை பெறும் என்று ஏனைய அரசியல் கட்சி களான ரெலோ, புளொட், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ்த் தேசியக் கட்சி ஆகியவற்றின் தலைவர்களான செல்வம் அடைக்கல நாதன், சித்தார்த்தன், விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், ஸ்ரீகாந்தா ஆகி யோரும் ஏற்பாட்டுப் பணிகளில் ஈடுபட் டுள்ள ரெலோவின் ஊடகப்பேச்சாளர் சுரேனும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை, இக்கூட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கி ரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப் பினருமான ரவூப் ஹக்கீமும் பங்கேற்க வுள்ளனர். (ஞா)

## இலங்கையில்...

கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்படு வது தொடர்பிலும் விளக்கம்கோரி மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் தொடர் பான ஐ.நா விசேட அறிக்கையாளர்கள் இணைந்து கடந்த ஒகஸ்ட் மாதம் 17ஆம் திகதி இலங்கை அரசாங்கத்திற்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்தி ருந்தனர்.

அக்கடிதத்தில் விளக்கம் கோரப் பட்டிருந்த விடயங் கள் தொடர்பிலான பதில் கடிதத்தை இலங்கை அர சாங்கம் இம்மாதம் 14 ஆம் திகதி ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் களுக்கு அனுப்பி வைத்திருந்தது.

இந்நிலையில் அவ்விரு கடிதங் களும் கடந்த வெள் ளிக்கிழமை பொது மக்கள் பார்வை யிடக்கூடிய வகை யில் பகிரங்கப்படுத் தப்பட்டுள்ளன.

மேற்கூறப்பட்ட வாறு இலங்கை அரசாங்கத்திடம் விளக்கம் கோரி ஐ.நா விசேட அறிக்கையாளர் களினால் அனுப்பி வைக்கப்பட்ட கடி தத்தில் மனித உரிமைகள் செயற் பாட்டாளர்களான சுதேஷ் நந்திமால் சில்வா, சேனக பெரேரா, ஊடக வியலாளர் தரிந்து ஜயவர்தன மற் றும் ஜோசப் ஸ்டா லின் ஆகியோ ருக்கு எதிரான அடக்குமுறைகள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் விரிவான தகவல்கள் உள் ளடக்கப்பட்டிருப்பதுடன் அவைகுறித்து விளக்கமளிக்குமாறும் அரசாங்கத்திடம் கோரப்பட்டுள்ளது.

இருப்பினும் அவற்றில் சில குற்றச்சாட் டுக்களுக்கு இலங்கை அரசாங்கம் விளக்க மளித்திருந்தாலும், மேலும் பல கேள்வி களுக்குப் பதிலளிக்கத் தவறியிருக்கின்றது என்று மனித உரிமைகள் செயற்பாட் டாளர்கள் தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் மேரிலோலொர் தெரிவித் துள்ளார். (ஞா)

## வாசு, விமல்...

னிலையில் யுகதனவி விவகாரத்தை கடுமையாகச் சாடவில்லை என மின்சாரத் துறை அமைச்சர் காமினி லொக்குகே தெரி வித்தார்.

யுகதனவி மின்நிலையத்தை அடிப் படையாகக் கொண்டு கைச்சாத்திடப்பட் டுள்ள ஒப்பந்தம் குறித்து வினவியபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

யுகதனவி மின்நிலையத்தின் 40 சதவீத பங்குகளை அமெரிக்க நிறுவனத் திற்கு வழங்கும் தீர்மானம் தொடர்பில் ஆளும் கட்சியின் பங்காளிக் கட்சி தலை வர்கள் தற்போது முன்வைத்துள்ள குற்றச் சாட்டுக்கள் அடிப்படையற்றவை.

அமைச்சரவை அமைச்சர்கள் அனை வரும் கூட்டுப் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக் கும் வகையில் செயற்படுவதை பங்காளி கட்சித் தலைவர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிடின் அமைச்சு பதவிகள் விரைவில் பறிபோக நேரிடும் என்றார். (ஞா)















வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (8451)

## பிரத்தியேக வகுப்பு

- தரம் 06 முதல் 11 வரை கணித பாடம்.
- தரம் 10 மற்றும் 11 வகுப்புகளுக்கு வர்த்தக பாடம்.
- தனிப்பட்ட முறை அல்லது குழுவாக நேரடியாகக் கற்பிக்கப்படும்.
- விசேடமாக இம் முறை O/L எழுதும் மாணவர்களுக்கு Zoom மூலமாக கடந்த 05 வருட Pass Paper செய்து விடப்படும். (8459)

**076 646 3860**

## ஆகாஷ் நகைமாடம்

சந்தை வீதி, உடுப்பிட்டி

வங்கியில் அடகு வைக்கப்பட்ட நகைகளைப் பார்த்து நகைக்கேற்ப பணத்தைத் தந்து வாங்கப்படும்.

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, கொடிகாமம், சாவகச்சேரி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, கிளிநொச்சி.

தொடர்பு

**076 825 7716** (8456)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய் சமுர்த்தி வங்கி வீதியில் 6 1/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)

1 3/4, 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன், மருதடி விநாயகர் கோவிலில் இருந்து 700 மீற்றர் தூரம்.

பார்வையிடும் நேரம்

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை.

தரகர் தேவையில்லை. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (8454)

**077 814 7389, 077 614 7333**

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

### அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113

### அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536

### அருள்

இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.

இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.

இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.

தொ.பே:- 076 443 1576 (C-2908)

## ஆட்டுக் கிடாய் விற்பனைக்கு

இரண்டு ஆட்டுக் கிடாய்கள் யாழ்ப்பாணத்தில் உடன் விற்பனைக்கு உண்டு. (8460)

**077 203 0309**

## வீடு விற்பனைக்கு

நல்லூர் செட்டித்தெருவில் 1 1/2 பரப்புக் காணியில் அமைந்த 2 வீடுகள், 2 கடைகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு (8458)

**076 702 3565**

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம் மற்றும் வடமராட்சி பிரதேசங்களில் இயங்கும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்ற விரும்புவர்கள் தொடர்பு கொள்ளவும். (C-2921)

**077 435 5658**
**021 226 4843**
avonintholdings@aol.com

## விரைவு பொதிகள் சேவை

### V2 TRAVELS

**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-2918)

0768226240 DHL

## கனடாவில் உடனடி வேலைவாய்ப்பு

### கடல் தொழிலாளர்கள்

மீன்பிடித்தலில் அனுபவம் உள்ளவர்கள்
கடல் சார் கற்கை நெறிகள் சான்றிதழ்கள்
வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**Cook** மேலை நாட்டு உணவு தயாரிப்பில் அனுபவம் உள்ளவர்கள்

ஏனைய வேலைவாய்ப்புக்கள்

- Industrial Butcher
- Carpenter
- Welder
- Furniture
- Electrical power line & cable workers
- Industrial Electricians
- Electricians
- Plumber
- Food Service Supervisor
- Administrative assistant

தகுதிகள்:- A/L PASS / DIPLOMA/DEGREE
ஆங்கில அறிவு

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். (C-2923)

**0777-068-777**

## வேலைக்கு ஆட்கள் தேவை

பருத்தித்துறையிலுள்ள

**TULIP GUEST INN**

இற்கு Room Boy ஒருவர் தேவை. எமது GUEST இல் தங்கி நின்று வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும். அத்துடன் பகுதி நேர வேலைக்கும் ஒருவர் தேவை. (C-2920)

**077 163 2330**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
26
12
1939

உதிர்வு
12
11
2020

அமரர்

### கந்தையா சிவகுருநாதன்

( சிவகுரு மில் உரிமையாளர் )

திதி : துவாதசி (01.11.2021)

உழைப்பின் உன்னதத்தை
எமக்குணர்த்திய எம் அப்பாவே
நீங்கள் மறைந்து ஓராண்டாகிறது
ஆயினும் உங்கள் நினைவுகள்
எம் மனங்களில் இருந்து
மாறவில்லை அன்பு அப்பா!

" முல்லை "
கரணவாய் தெற்கு, கரவெட்டி. (C-2917)

குடும்பத்தினர்

## நீங்களும் விரைவில் அமெரிக்காவில்... இன்னும் 03 நாட்களே

### அமெரிக்க அதிஸ்ட விசா

ஒரு தடவை மட்டும் பதிவுசெய்து கிடைக்காமல் அலுத்தக்கொண்டால் இந்தத்தடவை உங்களுக்குரிய வெற்றிவாய்ப்பை இன்னொருவருக்கு நீங்கள் விட்டுக்கொடுக்கிறீர்கள் என எடுத்துக்கொள்ளலாம்.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

**55000 இலவச விசாக்கள்**

0768226244

எல்லோரையும் போலவே பாடசாலை படிப்பை முடித்துவிட்டு வேலை தேடிக்கொண்டிருந்த யுவதி. நான் அமெரிக்க அதிஸ்ட லொத்தர் விசா பற்றி கேள்விப்பட்டு கொட்டும் மழையென்றும் பாராது V2 Travels இன் ஊடாக எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் பதிந்தேன்.



எனக்கு அதிஸ்டம் கிடைத்தது முதல் விசா கிடைக்கும் வரை முழு ஆதரவு தந்த V2 Travels க்கு மனமார்ந்த நன்றிகள். (C-2919)

ஜீவிதா
அமெரிக்கா விசா வெற்றியாளர்

**V2 Travels**

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0777068777 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.